இருக்கின்ற சுற்றுலாத் தலங்களில் சிறப்புமிக்க சுற்றுலாத் தலமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எனது தொகுதியான உதகையிலே அமைந்திருக்கின்ற அவலாஞ்சி, அப்பர் பவானி போன்ற இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு குறிப்பிட்ட இடத்தையும் சுற்றுலாத் தலம் என அறிவிப்பது இல்லை. இருப்பினும் குறிப்பிட்ட இடத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் அந்த இடத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் மதிப்பீடுகள் பெறப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

86—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***42353—திருமதி த. இந்திராகாந்தி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூர் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2015 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியினை, அப்பள்ளி அமைந்திருக்கும் பகுதியிலுள்ள ஆதி திராவிடர் மாணாக்கர் எண்ணிக்கை, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் நல்லரசால், நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னரும் கலைகள் பயின்ற பண்பாட்டின் சிகரமே, இன்னலோ, இடுக்கணோ எந்நிலை எய்தினும், பொன்னகையின்றி புன்னகை பூக்கும் போயஸ் தோட்டத்து புரட்சித் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து வரியில்லாத பட்ஜெட்டை வாரி வழங்கி மக்களுக்காக நாளெல்லாம் உழைத்திடும் மாதர்குல மாணிக்கமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் சிறந்த மாநிலமாக்கிட எண்ணில்லா திட்டங்களைத் தீட்டி செயலாற்றும் எங்கள் குல தெய்வமே, மாண்புமிகு கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

முற்பகல் 11–15

துறையூர் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூர் சுமார் இரண்டாயிரம் மக்கள்தொகை கொண்ட ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுதி. கோட்டாத்தூர் ஆதி

திராவிட நல தொடக்கப் பள்ளியில் 24 மாணவர்களும், 39 மாணவியர்களும் கல்வி பயின்று வருகின்றனர். தற்போது அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தினால் மேலும் அதிக மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். பின்வரும் காலங்களில் அதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் ஒன்றியம், பச்சைமலை, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதியான செம்புளிச்சாம்பட்டி உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியில் 95 மாணவர்களும், 115 மாணவியர்களும் கல்வி பயின்று வருகின்றனர். செம்புளிச்சாம்பட்டி கிராமத்தைச் சுற்றி தாளூர், எருமைப்பட்டி, ஏரிக்காடு, கொண்டூர் மற்றும் போந்தை ஆகிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் மேல்நிலைக் கல்வி கற்க அவர்களுடைய நலன் கருதி, இந்த ஆண்டு அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்த ஆண்டே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியானது 1928 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. தற்போது, 24 மாணவர்கள், 39 மாணவிகள். ஆக மொத்தம் 63 மாணவ, மாணவிகளுடன் இரண்டு இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் ஆகியோருடன் இப்பள்ளி இயங்கி வருகிறது. கோட்டாத்தூரில் வசிக்கும் 4,532 மக்களில் 2,204 நபர்கள் ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கோட்டாத்தூர் தொடக்கப் பள்ளியிலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் கோட்டாத்தூர் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இருப்பினும், ஆதி திராவிடர் மக்களின் பாதுகாவலராகத் திகழும் மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்

2015 மார்ச் 30]

தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இப்புனித அரசு, கோட்டாத்தூரில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான இட வசதி, திட்டத்தின் பயன்பாடு மற்றும் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முசிறி ஊராட்சி ஒன்றியம், கோட்டாத்தூரில் இயங்கிவரும் அரசு ஆதி திராவிடர் நல தொடக்கப் பள்ளியினை ஆய்வு செய்து, வாய்ப்பு இருப்பின் நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆதி திராவிட நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு நடைபெறும் இப்புனித அரசு, அடித்தட்டு மக்களின் விடிவெள்ளியாகத் திகழ்கின்ற அம்மா அவர்களால் 2014–2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ.1,998.36 கோடியில் 80 சதவீதம் கல்விக்காக மட்டுமே செலவு செய்து வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பள்ளி பழங்குடியினர் படிக்கும் பள்ளியாக இருப்பதால், அதை ஆய்வு செய்து, வரும் நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாத்தூர் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகவும், செம்புளிச்சாம்பட்டி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திட ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.